வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.857,44,50,000/—, மூலதனக் கணக்கில் ரூ.25,76,08,000/— மற்றும் கடன் கணக்கில் ரூ.80,00,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சி கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 14—7—2014 (திங்கட்கிழமை) காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2—54 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

43. 2012—2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் நாற்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)